FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167275

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊத.க. பிரிவு** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **7/2025** Date: நாள் **18.09.2025**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **1988 as amended by The Prevention** Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **17.09.2025** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **10.30 hrs** Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **18.09.2025** Time : நேரம் **1500 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** Time : நேரம் **1500 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கனிணி தட்டச்சு புகார் மனு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும். எத்திசையும் **சுமார் 50 கி.மீ. தென்மேற்கு.**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **ஊடமங்கலம் காவல் நிலையம்,**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **K.ஆதவ முருகன் ஐவகர்** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **கருவேலமுத்து**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **61** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் **———** Place of Issue : வழங்கப்பட்ட இடம் **———**
(f) Occupation : தொழில் **விவசாய வேலை** (g) Address : முகவரி **தெற்கு தெரு, காட்டுக்கூணங்குறிச்சி, விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ஜெயலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊடமங்கலம் காவல் நிலையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :

நான் இன்று 18.09.2025 ஆம் தேதி 15.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் அலுவலலில் இருந்தபோது, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தாலுக்கா, காட்டுக்கூணங்குறிச்சி, தெற்கு தெரு என்ற முகவரியைச் சேர்ந்த குருவேலமுத்து என்பவரது மகன் திரு.K.ஆதவ முருகன் ஜவகர் என்பவர் நிலையம் ஆஜராகி கனிணி தட்டச்சு புகார்மனு ஒன்றினை கொடுத்துக்கொண்டார். அதன் விவரம் பின்வருமாறு : 18.09.2025 அனுப்புநர் K.ஆதவ முருகன் ஜவகர் (வயது 61), த/பெ. கருவேல முத்து, தெற்கு தெரு, காட்டுக்கூணங்குறிச்சி, விருத்தாசலம்

(தொடர்ச்சி பக்கம் –3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …… Rank …… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …… பதவி …… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
S.SUNDARAJ
Inspector of Police
Name: பெயர் ……
Rank: நிலை VAC, Cuddalore No. எண் ……

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

தாலுக்கா, கடலூர் மாவட்டம். செல் 9444903107 பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கடலூர் மாவட்டம். ஐயா, நான் சென்னையில் உள்ள பார்மா மருந்து கம்பெனியில் வேலை செய்து ஓய்வு பெற்று தற்போது விருத்தாசலம் தாலுக்கா, காட்டுக்கூணங்குறிச்சி கிராமத்தில் எனக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனது பக்கத்து நிலத்தின் உரிமையாளரான எங்கள் ஊரை சேர்ந்த சக்கரேஸ் மகன் ஜான் பெரியநாயகம் என்பவர் எனது நிலத்தை விலைக்கு கேட்டார். நான் தர மறுத்துவிட்டேன். நான் சென்னையில் இருந்தபோது, ஜான் பெரியநாயகம் எனது அனுமதி பெறாமல் எனது நிலத்தில் பைப் லைன் பதித்து தண்ணீர் பாய்ச்சி வந்தார். அந்த பைப் லைன்களை நான் எடுத்துவிட்டேன். என்னுடைய நிலத்தில் எதிர் தரப்பினர் பைப்லைன் போடவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது என்று நெய்வேலி சப்–கோர்ட்டில் O.S.No.14/2025–ன்படி சிவில் வழக்கு போட்டுள்ளேன். அந்த வழக்கானது நிலுவையில் உள்ளது. இந்நிலையில் கடந்த 27.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் நான் எனது நிலத்தில் இருந்தபோது, ஜான் பெரியநாயகம் மற்றும் மூன்று நபர்கள் என்னிடம் தகராறு செய்தனர். அதனால் எனக்கும், எதிர் தரப்பினக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இரு தரப்பினரும் விருத்தாசலம் அரசு மருத்துவனை செய்து சிகிச்சைபெற்றோம். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின்படி ஊ.மங்கலம் காவல்நிலைய FIR No.49/2025 ன்படி எதிர் தரப்பினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிர் தரப்பினர் கொடுத்த புகார் மீது எனது தரப்பினர் மீது FIR No.50/2025 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்மீது பதியப்பட்ட வழக்கு சம்மந்தமாக நான் முன் ஜாமின் பெற்று நீதிமன்ற நிபந்தனையின்படி கடந்த 17.09.2025 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு ஊ.மங்கலம் காவல்நிலையம் சென்று கையெழுத்து போட்டேன். அப்போது காவல்நிலையத்தில் இருந்த ஆய்வாளர் ஜெயலட்சுமி என்பவர் என்னை அழைத்து "பெயில் வாங்கியதற்கு எவ்வளவு செலவாச்சி" என்று கேட்டு, உன்மீது இன்னும் இரண்டு வழக்குகள் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னார். அதற்கு நான் நிறைய

18/9/25

பணம் செலவு செய்தேன் என்று சொன்னேன். அப்போது ஆய்வாளர் என்மீது பதியப்பட்டுள்ள மேலும் இரண்டு வழக்குகளின் FIR எண்கள் 104/2025 மற்றும் 114/2025 ஆகிவற்றை என்னிடம் கொடுத்து, இந்த வழக்குக்கு பெயில் போட்டிடு, அதுவரைக்கும் நான் உன்னை கைது செய்யாமல் இருப்பதற்கு ரூ.20,000/– கொடு என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு ஆய்வாளர் சரி உன்னை கைது செய்யாமல் இருப்பதற்கு ரூ.10,000/–த்தை கொடு என்று கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும், இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு ஆய்வாளர் ஜெயலட்சுமி பணத்தை ஏற்பாடு செய்து என்னைவந்து பார் என்றும், நான் சொல்லும் நபரிடம் பணத்தை கொடு என்றும் சொல்லி, உன்வழக்கை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அதன் பின்னர், வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில், நடக்காத சம்பவத்திற்காக என்மீது பொய்யாக இரண்டு வழக்குகள் பதிவு செய்தும், கைது செய்யாமல் இருப்பதற்காக லஞ்சம் கேட்கும் ஆய்வாளரிடம் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, நான் இன்று 18.09.2025 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு ஊ.மங்கலம் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு, எனது நிலத்தில் இருந்த வேலைகளை முடித்துவிட்டு, அதன்பிறகு கடலூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து என்னிடம், என்னை கைது செய்யாமல் இருப்பதற்காக லஞ்சம் கேட்ட ஊ.மங்களம் ஆய்வாளர் ஜெயலட்சுமி அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களிடம் புகார் மனு கொடுக்கிறேன். ஊ.மங்கலம் ஆய்வாளர் ஜெயலட்சுமி அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/– கொண்டுவந்துள்ளேன். இப்படிக்கு, (ஒப்பம்.....). 18.09.2025

Submitted,

Received the above Computer typed complaint on 18.09.2025 at about 15.00 hrs., a quiet and quick verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also

verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.7/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 18.09.2025 at 16.30 hrs., sd/-xxxxx 18/09/2025 (S.SUNDRARAJ), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார்மனுவுடன் இணைத்து கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

(S.SUNDRARAJ),
Inspector of Police,
V & AC, Cuddalore.